## முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

<u>DW-3 - OS. No.423/2018 C/w 421/2018</u>

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி முதன்மை சார்பு நீதிபதி Dr.V.ஸ்ரீவித்யா, முன்னிலையில் திருமதி.ஜெயலட்சுமி கிரேடு 2 பென்ச் கிளர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திரு.பிரேம் அகர்வால் | தொழில் : |
| த/பெ. : திரு.என்.அகர்வால் | வயது : 68 |
| முகவரி : | மொபைல் எண்: |

**பிரதிவாதி தரப்பில் சாட்சி-3 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சி. எனது தரப்பு சாட்சிக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 30.12.2010 | Sale Deed | Certified Copy | **பிவாசாஆ-7** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு பிராது தள்ளுபடி செய்ய வேண்டுமாய் கேட்டு கொள்கிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி-3 மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

1.சொத்தை வாங்குவதற்கு முன்பு வழக்கறிஞரிடம் கருத்துரை பெற்றேனா என்றால் ஆமாம். தாவா சொத்தின் நான் வாங்கிய பகுதியை அளந்து பார்த்து வாங்கினேன் என்றால் இல்லை. தாவாசத்தின் நான்கு எல்லைகள் தெரியுமா என்று கேட்டால் எனக்கு விஸ்தீரணம் மட்டும் தெரியும். எல்லைகள் யார் யார் இருக்கிறார்கள் என்று தெரியாது. தாவா சொத்தின் மூல பத்திரத்தை நான்

பார்த்தேனா என்று கேட்டால் மூல பத்திரத்தை பார்த்தேன் ஆனால் ஆஜர் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

2 தாவா சொத்தின் பாகக்கரர் பத்திரத்தை நான் பார்த்திருக்கிறேன் ஆனால் அதனை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை. தாவா சொத்தை வாங்கிய பின்பு வருவாய் துறையினரிடம் நான் மனு செய்த என்ன என்று கேட்டால் என்னுடைய பெயருக்கு பட்டா மாற்றம் மற்றும் சிட்டா மாற்றம் செய்திருக்கிறேன். பட்டா மாறுதல் கோரி எப்போது விண்ணப்பித்தேன் என்று என்னால் குறிப்பிட்ட சொல்ல முடியாது.

3. வருவாய்த்துறையினர் வந்து நிலத்தை அளந்தார்களா என்று கேட்டால் அவர்கள் அளந்து இருப்பார்கள் அளந்ததை நான் நேரில் பார்த்தேனா என்று கேட்டால் நேரில் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. நான் ஆக மொத்தம் 30.5 சென்ட் நிலம் வாங்கியிருக்கிறேன். என்னுடைய நிலத்தின் நான்கு புற எல்லைகள் குறிப்பிட்டு சொல்ல வேண்டுமென்றால் என்னால் சொல்ல முடியாது ஆனால் என்னுடைய நிலத்தை கம்பி வேலி போட்டு வைத்திருக்கிறேன்.

4. தாவா சொத்தின் அத்துக்கள் எனக்கு தெரியாது. என்னுடைய பூமிக்கு செல்லும் பாதை எந்த இடத்தில் இருக்கிறது என்று கேட்டால் எனக்கு தெரியாது. என்னுடைய பூமியை கம்பி வேலி போட்டு, கேட் போட்டு, பூட்டு போட்டு வைத்திருக்கிறேன். உயிலின் அசலைமற்றும் நகலினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

5.உயிலின் நகலை நான் பார்த்திருக்கிறேன். பதிவாளர் அலுவலகத்திலிருந்து எப்போது நகல் வாங்கினேன் என்று தெரியுமா என்றால் நான் பதிவாளர் அலுவலகத்திலிருந்து சான்றிதழ் எதுவும் வாங்கவில்லை. உயிலின் நகல்தான் என்று எனக்கு தெரியும் ஆனால் அது அசல் நகலா அல்லது சான்றிட்ட நகலா

என்று எனக்கு தெரியாது. உயிலில் கையெழுத்து செய்திருக்கும் சாட்சிகளின் பெயர் தெரியுமா என்று கேட்டால் பெயர் தெரியாது.

6. என்னுடைய கிரையமானது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல அது பெயரளவுக்கு கிரையம் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் வருவாய் துறை ஆவணங்கள் நான் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் சரியான முறையில் சரியான பிரதிபலன் கொடுத்து தான் இந்த தாவா சொத்தினை வாங்கி இருக்கிறேன். மற்ற உரிமையாளர்களுக்கு என்னுடைய நிலத்தை அளக்கும் போது கொடுக்க வேண்டிய நோட்டீசை நான் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய ஆவணம் ஏற்றுக் கொள்ளத் தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

7. ஈஸ்வரமூர்த்தி என்ற நபருக்கு விற்பனை செய்த சொத்தை தெரியுமா என்று கேட்டால் தெரியாது. ஈஸ்வரமூர்த்திக்கு எவ்வளவு சொத்து கிரயம் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது, நான் வாங்கியது 30.5 சென்ட் மட்டும் தான். நான் வாங்கி இருக்கும் நிலம் உண்மையில் பூமியில் எங்கு இருக்கிறது என்று கேட்டால் எனக்கு சரியாக சொல்லத் தெரியாது ஆனால் ஆவணங்களின்படி சரியாகத்தான் இருக்கிறது.

**<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி-3 மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் அசல் வழக்கு எண்.423/2018-ன் 4 முதல் 6- ம் பிரதிவாதி மற்றும் அசல் வழக்கு எண்.421/2018-ன் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

1.இந்த வழக்கின் ஆவணங்கள் மற்றும் பிராது, வழக்குரை ஆகியவற்றை நான் பார்த்திருக்கிறேன். அசல் வழக்கு எண். 421/2018 மற்றும் அசல் வழக்கு எண். 423/ 2018 ஆகிய இரண்டு வழக்குகளிலும் நான் தரப்பினராக இருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தானது ஆதியில் முருகப் கவுண்டர் என்பவருக்கு சொந்தமானது.

2. முருகப்ப கவுண்டருக்கு ஒரு மகன் மற்றும் மூன்று மகள் மகள்கள் இருந்தார்கள் என்று சொன்னால் எனக்கு மகன் இருந்த விவரம் மட்டும்தான் தெரியும். நான் டெல்லி மாநிலத்தை சேர்ந்தவர். பொதுவாக சொத்தை வாங்கும்போது அந்த சொத்தை சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் பார்ப்பது வழக்கம்தான் என்றால் சரிதான். இந்த தாவா சொத்திற்கும் வில்லங்கம் போட்டு பார்த்து இருக்கிறேன் அதற்கு பின்பு தான் தாவா சொத்தை கிரயம் செய்தேன்.

3. இந்த வழக்கில் வில்லங்க சான்றிதழை நான் ஆஜர் செய்திருக்கிறேனா என்று கேட்டால் ஆஜர் செய்யவில்லை. நான் தாவா சொத்து நிலுவையில் இருக்கும் விவரம் தெரிந்து தான் வாங்கி இருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா இருப்பது தெரிந்து இருந்தால் நான் வாங்கி இருக்க மாட்டேன். நான் சுப்பிரமணியம் என்ற நபரிடமிருந்து தான் சொத்தை வாங்கினேன் அவர் நாகராஜிடம் இருந்து வாங்கினார் என்று சொன்னால் இருக்கலாம். 2004 ஆம் ஆண்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இருந்தபோது நாகராஜ் இந்த வழக்கில் தரப்பினராக இருந்தார் என்று சொன்னால் எனக்குத் தெரியாது.

4. நாகராஜ் என்ற நபருக்கு நடராஜனுக்கு சொத்தில் உரிமையே இல்லை என்று தெரிந்திருந்தும் வேண்டுமென்றே பல ஆவணங்களை உருவாக்கி கடைசியில் நான் மேற்சொன்ன சொத்தினை அவரிடம் இருந்து வாங்கி இருக்கிறேன் என்று சொன்னால் எனக்கு தெரியாது. இந்த வழக்கின் விவரங்கள் அனைத்தும் நான் கிரயம் வாங்குவதற்கு முன்பே எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல எனக்கு தெரியாது.

5. என்னுடைய பிரமாண வாக்கு மூலத்தில் முருகப்ப கவுண்டர் நடராஜ் என்பவருக்கு 24.05.2001 ஆம் தேதி அன்று ஒரு உயில் எழுதி வைத்திருந்தார் என்று குறிப்பிட்டு சொல்லி இருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். ஆனால் அந்த உயிலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால்

சரிதான். மேற்ச்சொன்ன உயிலை நான் என்னுடைய கோப்புகளில் வைத்திருக்கிறேன் தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன்.

6. நான் தாவா சொத்தினை கிரயம் வாங்கிய தேதி என்று எனக்கு அந்த உயில் இருக்கும் விவரம் தெரியும் என்றால் ஆமாம் தெரியும். முருகப்ப கவுண்டர் நடராஜ் என்பவருக்கு அப்படி ஒரு உயில் எழுதி வைக்கவே இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவர் அப்படி உயிலே எழுதி வைக்கவில்லை என்றும் அதனால் தான் நான் அந்த உயிலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

7. முருகப்ப கவுண்டர் 2002 ஆம் ஆண்டு இறந்து போனார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். உயில் எழுதிய போது எந்த நிலையில் எழுதப்பட்டது என்ற விபரம் எல்லாம் எனக்கு தெரியாது. நான் கிரயம் பெற்றபோது முருகப்பா கவுண்டரின் மகன் நடராஜ் உயிருடன் இருந்தாரா என்ற விவரம் எல்லாம் எனக்கு தெரியாது. முருகப்ப கவுண்டர் நடராஜன் என்ற நபருக்கு எந்த காலத்திலும் உயில் எழுதி வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

8. நடராஜன் என்ன வழக்குரை தாக்கல் செய்திருக்கிறார் என்று என்னால் குறிப்பிட்ட சொல்ல முடியாது. நடராஜன் தன்னுடைய வழக்குரையில் முருகப்ப கவுண்டர் உயில் எழுதி வைக்கும் போது அவருக்கு பார்வை இல்லை என்றும் கேட்கும் திறன் குறைவாக இருந்தது என்றும் குறிப்பிட்டு சொல்லி இருக்கிறார் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது.

9. முருகப்ப கவுண்டருக்கு உயில் எழுதும் மனநிலை மற்றும் உடல்நிலை இல்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. நடராஜன் என்பவர் காவல்துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தார் என்று அவருடைய எதிர்வழக்குரையில் சொல்லி இருக்கிறார் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. நடராஜன் என்பவர் தன்னுடைய தந்தை முருகப் கவுண்டர் தனக்கு முழு சொத்தையும் உயில் மூலம் எழுதி வைத்துவிட்டதாக

உயில்கள் மூன்று தயாரித்து இருக்கிறார் என்றும் சொன்னால் எனக்கு தெரியாது. முருகப்ப கவுண்டருக்கு அந்த உயிலில் என்ன இருக்கிறது என்றே தெரியாது என்று சொன்னால் எனக்கு தெரியாது.

10. முருகப்ப கவுண்டருக்கு நான்கு மகள் மற்றும் ஒரு மகன் இருந்த போது அவருடைய சொத்துகளான தாவா சொத்தைகள் ஒவ்வொரு வாரிசுதாரருக்கும் ஒரு பங்கு என்ற வீதத்தில் 1/5 பங்கு தான் நடராஜ் எனக்கு கிடைக்க வேண்டியது என்று சொன்னால் எனக்கு தெரியாது. நான் நல்லெண்ண கிரைய என்று சொன்னால் கிரையதாரர் இல்லை என்றால் சரியல்ல.

11. நடராஜன் என்ற நபர் வழக்கு நிலுவையில் இருக்கும் போது நாகராஜிற்கு விற்று விட்டார் என்றும் அந்த நாகராஜ் ஜெயக்குமார் அகர்வால் என்ற நபருக்கு விற்று விட்டார் என்றும் மேற் சொன்ன ஜெயக்குமார் அகர்வால் என்பவர் சுப்ரமணியத்திற்கு விற்று விட்டார் என்றும் அவரிடம் இருந்துதான் நான் தாவா சொத்தினை வாங்கி இருக்கிறேன் என்றும் சொன்னால் எனக்கு சுப்பிரமணியத்திடமிருந்து தாவா சொத்தினை ஒரு பகுதியை வாங்கிய விவரம் மட்டும் தான் தெரியும். மேற் சொன்ன அனைத்து பரிவர்த்தனைகளும் வழக்கு நிலுவையில் இருக்கும் விவரம் தெரிந்து தான் செய்யப்பட்டன என்றும் சொன்னால் சரியல்ல.

12. இந்த விவரங்கள் அனைத்தும் தெரிந்திருந்த நிலையில் தான் நான் தாவா சொத்தின் ஒரு பகுதியை நான் வாங்கிய பகுதியை அமிஷா கொத்தாரி என்ற நபருக்கு 2025 விற்று இருக்கிறேன் என்று சொன்னால் தாவாவினை பற்றிய விவரம் இல்லாமல் தான் நான் அவருக்கு விற்று இருக்கிறேன். என்னுடைய முதல் விசாரணை பிரமாணவாக மூலத்தில் 2025 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் தேதி அன்று அமிஷா கொத்தாரி என்ற நபருக்கு நான் கிரயம் செய்த விவரத்தை நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

13. அமிஷா கொத்தாரிக்கு நான் இந்த வழக்கின் விவரங்களை வெளிப்படையாக சொல்லி இருக்கிறேனா என்றால் இன்னும் இல்லை. 2010 ஆம் ஆண்டில்

இருந்து நான் வழக்கின் தரப்பினராக இருக்கிறேன் என்றால் ஆமாம். என்னுடைய கிரயம் உண்மையானது அல்ல என்று தெரிந்திருந்தும் அமிஷா கோத்தாரிக்கு தாவா சொத்தின் ஒரு பகுதியை கிரயம் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரி அல்ல. இன்று வரை என்னுடைய கிரயம் நிலைக்கத்தக்கது என்று தான் நான் நம்பிக் கொண்டிருக்கிறேன்.

14. எனக்கு கிரயம் செய்து கொடுத்தவர்களுக்கு தாவா சொத்தில் உரிமை இல்லாத போது என்னுடைய கிரையமும் எனக்கு எந்தவிதமான உரிமையையும் ஏற்படுத்தாத என்று சொன்னால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற தாவா சொத்தின் ஒரு பகுதி காலி இடமாக இருக்கிறது என்று சொன்னால் ஆமாம் அதில் ஒரு ரூம் போட்டு இருக்கிறோம் அதற்கு மின்சார கனெக்சன் வாங்கி இருக்கிறோம்.

15. மயிலாத்தாளின் வாரிசுகளான தாமோதரன், கலாமணி, கவிதா, ஆகியோரின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் நான் பொய் வழக்கு ஆடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போதும் தாவா சொத்துக்கள் அனைத்தும் முருகப்ப கவுண்டரின் வாரிசுகளின் அனுபவ சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. தற்போது நான் கிரயம் பெற்ற சொத்தின் சுவாதீனத்தில் நான் இல்லை என்று சொன்னால் சரிதான்.

16. நான் எந்த காலத்திலும் நான் கிரயம் பெற்ற சொத்தின் பகுதியில் நான் சுவாதீனத்தில் இருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya

Digitally signed by Dr.V.Sree Vidya
DN: cn=Dr.V.Sree Vidya, ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.